இன்றைய சர்க்காரிடம் சீர்திருத்தம் எதிர்பார்க்க முடியாது

சமுதாயத் துறையில் புரட்சி ஏற்படுத்திவருவது தி. மு. கழகமே

—(0)—

போராட்டங்களில் நிச்சயம் வெற்றி காண்போம்

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டில் கே. கே. நீலமேகம் துவக்கவுரை

"நம்முடைய மக்களின் கல்வியமைப்பில் சர்க்கார் செய்திருக்கும் மாறுதல்களால் ஏற்படப்போகும் தொல்லைகளை எதிர்நோக்கி மிக்க நெருக்கடியான நிலைமையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். முன்பு தோழர் ஆச்சாரியார் அவர்களாலும், தோழர் அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களாலும் இந்தி இஷ்ட பாடமாக புகுத்தப்பட்டபோதே நாம் அதை எதிர்த்து ஆயிரக்கணக்கான தோழர்கள் சிறை சென்றோம் என்பதும், இரு உயிர்களைப் பலிகொடுத்தோம் என்பதும் நம் தோழர்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். இப்போது மலையாள மந்திரி மாதவமேனன் அவர்கள் இந்தியை கட்டாய பாடமாக்கியதுடனில்லாது நம் தாய்மொழியாகிய தமிழ் கட்டாய பாடமாக கற்கவேண்டியதில்லை என்று உத்திரவிட்டிருக்கிறார். இது தமிழ் நாட்டுக்குத் தமிழ் தெரியாத, தமிழரல்லாதார் ஒருவர் கல்வி மந்திரியாக இருப்பதால் நேர்ந்த கேடாகும். நாம் இதை கண்டிப்பாய் எதிர்த்து முறியடித்தே யாகவேண்டும். இம்மாநாடு இதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுக்குமென்று எதிர்பார்க்கிறேன்," என்று மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டை துவக்கி வைத்துப் பேசுகையில் குடந்தைத் தோழர் கே. கே. நீலமேகம் அறிவித்தார்.

சோழவந்தான், ஜூன் 10—

இன்று காலை மதுரை மாவட்ட முதலாவது திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டைத் துவக்கிவைத்தது குடந்தை தோழர் கே. கே. நீலமேகம் ஆற்றிய சொற்பொழிவாவது:—

மாண்புமிக்க பாண்டியமண்டல பெருமக்களே! அறிஞர் அண்ணா அவர்களே! வரவேற்புத் தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கம் உரித்தாகுக.

மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக மாநாட்டை துவக்கி வைக்கும் பணியை எனக்களித்தமைக்கு, வரவேற்புக் குழுவினர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாநாட்டை துவக்கி வைக்கும் பணியை எனக்களித்து பெருமைபடுத்தியது எங்கள் மாவட்டத்திற்கே ஒரு தனிப் பெருமையை அளித்ததாகவே நான் கருதுகிறேன்.

திராவிடர் கழகத்தில் பெரியார் அவர்களின் தலைமையின் கீழ் அவருடைய உத்திரவுக்கு தலைவணங்கி சுமார் 26 வருடங்கள் என்னாலியன்ற தொண்டாற்றி வந்த நானும், இங்கு குழுமியுள்ள ஏனையோரும் சென்ற 9 மாத காலத்துக்கு முன் அவரை விட்டுப் பிரிந்து, திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்துக் கொண்டு தொண்டாற்ற வேண்டிய நிலைக்கு நம் பெரியார் அவர்களால் கொண்டு வரப்பட்டதை பற்றி நினைத்தால் வருந்தாமலிருக்க முடியவில்லை.

குடந்தையில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில், ஒரு லக்ஷத்திற்கு மேற்பட்ட வீரர்களும் வீராங்கனைகளும் தங்கள் உடல் பொருள், ஆவி மூன்றையும் இழக்கத் துணிந்து தொண்டாற்ற தயாராக இருந்தனர். அறப்போரில் ஈடுபட்ட தொண்டர்கள் அடிபட்டு உதிரம்சொட்டிய காலத்திலும் அவர்கள் நடந்துகொண்ட அமைதியான முறையைப் பார்த்து மகாத்மா சீடர்களாகிய காங்கிரசார் தம்மால்கூட இம்மாதிரி நடந்துகொள்ள முடியவில்லையே என்று தலை குனிய நேரிட்டது.

அமைதியாகவே எந்தப் போராட்டத்தையும் வெற்றியுடன் நடத்தக் கூடிய ஆற்றலுடைய தொண்டர்கள் லட்சக்கணக்கில் இருந்த நேரத்தில், தலைவர் பெரியார் அவர்கள் அவர்களை சரியான முறையில் பயன்படுத்தி, ஒரு பெரும் போராட்டத்தை நடத்தி, அரசியலாரை நம் விருப்பத்திற்கிணங்கும்படி செய்திருக்கக் கூடிய நிலைமையை உண்டு பண்ணத் தவறியதுடன், நமக்குள் பிளவேற்படும்படியும் செய்துவிட்டார். குடந்தையில் 6-5-49-ல் நடந்த அறப்போர் வெற்றி விழாவின் போது நம் சமூகத் தோழர்களுக்கும் பொது மக்களுக்கும் இருந்த உணர்ச்சியையும் ஊக்கத்தையும் தலைவர் அவர்கள் சரியாக பயன்படுத்தி திராவிட நாடு பிரிவினை போராட்டத்தையே நடத்தி வெற்றி கண்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (10—6—50) வெளியீடு (11—6—50) [இதழ் 275

செஞ்சீனாவுக்கு பர்மா அங்கீகாரம்

ஆஸ்திரேலியா இப்பொழுது அவ்வாறு செய்யாதாம்

பஞ்சம் வாட்டுகிறதென்று முதலைக்கண்ணீர்!

ரங்கூன், ஜூன் 8—

செஞ்சீனாவை அங்கீகரித்துள்ளதாகவும், அரசியல் உறவு ஏற்படுத்திக்கொள்ளப் போவதாகவும் பர்மா சர்க்கார் இன்று அறிவித்துள்ளது.

யாவோ-சாஸ்-மிஸ் கம்யூனிஸ்டு சீனாவின் பிரதிநிதியாக பர்மாவிலும், தேசீய சீனாவில் பர்மா தூதராக இருந்த உ-மிண்ட்-தின், கம்யூனிஸ்டு சீனாவில் பர்மா தூதராகவும் இருப்பார்களென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்ட்ரேலியா அங்கீகரிக்காதாம்!

கம்யூனிஸ்டுசீனாவை அங்கீகரிக்கக் கூடிய எண்ணமொன்றும் இப்பொழுது கிடையாதென்று ஆஸ்திரேலிய அயல் நாட்டு மந்திரி தோழர் பி. சி. ஸ்பெண்டர் அறிவித்துள்ளார்.

செஞ்சீனாவில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி, அப்பஞ்சத்தை அரசியல் கண் கொண்டு நோக்குவதைவிட தாராளச் சிந்தனையுடன் நடந்துகொள்ளப் போவதாக அவர் அறிவித்தார்.

சீனா என்றும் கோதுமையையும், சோயா மொச்சைகளையும் ஏற்றுமதி செய்யும் நாடாக இருந்துள்ளதே தவிர பற்றாக்குறை நாடாக இருந்ததில்லை, வெள்ளையர் சுரண்டல் மேலிட்டதாலும், கட்டாயமாக அபினியைச் சீனாவில் திணித்து மக்களை மந்தபுத்தியினராகவும், சோம்பேறிகளாகவும் ஆக்கிவிட்டதால்தான் நாடு சீர்கெட்டிருந்தது. இந்த நிலை மாறிவிட்டது கைப்பற்றிய பிரதேசங்களில் தீவிரமாக உணவு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டதால் இன்று செஞ்சீனாவில் பஞ்சம் ஏற்படும் என்று கோதுமையையும் உருளைக்கிழங்கையும் கடலில் கொட்டிப் பாழாக்கி வந்த முதலாளித்துவ, ஏகாதிபத்யவாதிகள் எதிர்பார்த்தது போல்நடக்கவில்லை. என்றாலும் செஞ்சீனாவில் பஞ்சப்பேய் தலைவிரித்தாடுகிறது; எங்கள் உதவி இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாதென்று அமெரிக்க அயல் நாட்டு மந்திரி டீன் அச்சீசன் கூறுவதும், அதற்குப் பக்க மேளமடிப்பது போல் பிற்போக்குக் கட்சிச் சார்பில் மந்திரி வேலை வகிக்கும் தோழர் பி. சி. ஸ்பெண்டர் கூறுவதும் வியப்பூட்டுவதாக உள்ளது.

லண்டன், ஜூன். 9—

அடிக்கடி சிகரெட் பிடித்துக் கொண்டே இருந்தால் தாடை எலும்பு கலகலத்து பற்கள் உதிர்ந்து விடும் என்று ஸ்டாக்ஹோம் பல வைத்யசாலையைச்சேர்ந்த புரபஸர் கஸ்டாய் ஹெருலப் என்பவர் கூறியிருக்கிறார்.

காங்கிரசார் பதவியிலுள்ளவரை கவலை நமக்கேன்!

—(0)—

அந்நிய முதலீட்டுக்கு ஆபத்தில்லை ஆதரவும் குன்றாது

—(...)—

பிரிட்டன்-இந்தியா காதல் பிரிக்க முடியாதது

இந்திய பத்திரிக்காசிரியரின் கும்மாளம்!

லண்டன், ஜூன் 9—

கூடிய சீக்கிரமே கிழக்கு நாடுகளிலுள்ள மார்க்கெட்டுகளில் ஜப்பான் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிவிடும் அறிகுறிகள் தென்படுகின்றனவென்று கல்கத்தா பத்திரிகையின் 'கேபிடல்' ஆசிரியர் தோழர் டைஸன் கிழக்கிந்திய சங்கத்தில் செய்த பிரசங்கம் ஒன்றில் கூறினார்.

இந்தியா இதர நாடுகளுடன் சேர்ந்து தன் நாணய மதிப்பைக் குறைத்துகொண்டது மிகவும் நியாயமானசெய்கை என்றும், பாகிஸ்தான் அவ்வாறு செய்யாததை தவறு என்றே தான் கருதுவதாகவும் அவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது;—

பிரிட்டிஷ் சம்பந்தப்பட்டது ஆகவே அதை வெறுக்கவேண்டும் என்ற மனப்பான்மை இந்தியருக்கு கிடையாது. பர்மாபோல் அல்லாமல் அவர் இந்தியர் வர்த்தகம் இந்தியரல்லாதார் வர்த்தகம் எல்லாவற்றையும் ஒரு சமநோக்குடன் அவர்கள் கவனிக்கின்றனர்.

காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று நேரு சர்க்கார் பதவியிலிருக்கும் வரை அந்நியர் முதலீடுகளுக்கு எவ்வித ஆபத்துமில்லை என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க நீக்ரோ மாணவர்

இந்தியா வருகிறார்கள்

புதுடில்லி, ஜூன் 9—

வர்ஜீனியா ரிச்மாண்ட் சர்வகலாசாலையைச் சேர்ந்த 50 நீக்ரோ மாணவர்கள் ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவுக்கு வரவிருக்கின்றனர்.

இவர்கள் ஒரு வாரம் இந்தியாவில் தங்குவர்.

மாலை மணி

சென்னை 10—6—50 சனிக்கிழமை

ஜனநாயகமா ? :: :: சண்டித்தனமா ?

பொதுமக்களுக்குச் சொந்தமானதாகவும், பொதுமக்களால் நடத்தப்படுவதாகவும், பொதுமக்களுக்காக இருப்பதாகவும் அமைந்த அரசாங்கமே ஜனநாயக அரசாங்கம் என்று அறிவுடையோர் கூறுவர்.

ஜனநாயகஅரசாங்கத்திற்கு இத்தகைய விளக்கத்தைத் தெளிவுபடஎடுத்துக்கூறியவர், அமெரிக்க விடுதலை வீரரும், அமெரிக்கக் குடியரசின் முன்னாள் தலைவருமான ஆப்ரகாம் லிங்கன் ஆவார்.

அமெரிக்க நாட்டின் விடுதலை வீரன் தந்த விளக்கம் இது. ஆனால், இந்நாட்டில் "விடுதலை வீரர்கள்" என்றும், "தேசத்தியாகிகள்" என்றும் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் காங்கிரஸ் ஆளவந்தார்கள் ஜனநாயகத்திற்குக்கொண்டிருக்கும் விளக்கம் இருக்கிறதே, அது. விசித்திரம் நிறைந்ததாகவே இருக்கிறது.

காங்கிரஸ்காரர்களுக்குச் சொந்தமானதாகவும், காங்கிரஸ்காரர்களால் நடத்தப்படுவதாகவும், காங்கிரஸ்காரர்களின் நன்மைக்காகவும் இருப்பதே 'ஜனநாயக அரசாங்கம்' என்பதற்குப் பொருள், என்றவாறு காங்கிரஸ்காரர்கள் நடைமுறையில் நடத்திக்காட்டுகிறார்கள்.

ஜனநாயகத்திற்கு அவர்கள் வாயினால் சொல்லிக்காட்டுவது வேறு, ஆனால் நடைமுறை செயல்களால் மெய்ப்பித்துக் காட்டுவது, "ஜனநாயக அரசாங்கம்" என்பதற்குக் "காங்கிரஸின் சொந்த அரசாங்கம்" என்பதேயாகும்.

ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள், ஒரு குறிப்பிட்டக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு, அவர்கள் பொதுமக்களின் வேலைக்காரர்களாகக் காட்சியளிக்க வேண்டுமேயல்லாது, அந்தக் குறிப்பிட்டக்கட்சிக்காரர்களாக ஆட்சிப்பொறுப்பில் காட்டிக் கொள்ளக்கூடாது இதுதான் நாகரிகம் வாய்ந்த, நேர்மையிலும் நீதியிலும் நாட்டங்கொண்ட நாடுகளில் காணப்படும் சிறந்த பண்பாகும்.

ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் நேரமும், நினைப்பும், உழைப்பும், பொருளும், சலுகையும், வாய்ப்பும், வசதியும் பொதுமக்கள் எல்லோருடைய நன்மையைக்கருதி, பொது வகைச் செலவழிக்கப்பட வேண்டுமேயொழிய, ஒரு குறிப்பிட்ட கட்சிக்குச் செலவிடப்படுவதாக இருக்கக் கூடாது. ஆனால் இந்த நாட்டிலோ பொதுமக்களின் பணமும், வசதியும், வாய்ப்பும் ஒரு குறிப்பிட்டக்கட்சியாகிய காங்கிரஸ் வளருவதற்கும், அது வலுவடைவதற்கும், அது தேர்தல் முதலியவைகளிலே வெற்றி பெறுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. ஆட்சிப் பீடத்திலிருக்கும் கட்சி காங்கிரஸ் கட்சி என்ற காரணத்தால், பொதுக்களின் அரசாங்கம் காங்கிரஸுக்கு அடிமைப் படுத்தப்பட்டு இருக்கிறது அரசாங்கம்காங்கிரஸுக்கு குற்றேவல் புரியும் அளவுக்கு அணவ ஆளவந்தார்களால் ஆக்கப் பட்டுவிட்டது.

தங்கள் கட்சிவாழ்வதற்காக அரசாங்கத்தின்எல்லாசலுகைகளையும் கொடுத்தும், மற்றைய கட்சிகளை அழிப்பதறகாகஎவ்வளவு அடக்குமுறைச் சட்டங்களை உபயோகிக்க முடியுமோ அவ்வளவையும் உபயோகித்தும் வரும் தன்மையிலிருந்தே இந்தக்காங்கிரஸ் அரசாங்கம் ஜனநாயகத்தைக்குழிதோண்டி புதைத்து விட்டதை யாரும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

காங்கிரஸ் மந்திரிகள்பொது மக்களின் பணத்தைச் சம்பளமாக வாங்கிக்கொண்டும் போக்குவரத்துச் செலவைப் படியாகப்பெற்றுக்கொண்டும், அரசாங்கத்தின் காரை எடுத்துக்கொண்டும், அரசாங்க செலவிலேயே ஆங்காங்கு கூட்டங்கள் அமைத்துக் கொண்டும், காங்கிரஸ் கட்சிக்காக இப்பொழுதிருந்தே தேர்தல் பிரசாரம் செய்பத் தொடங்கிவிட்டார்கள். காங்கிரஸ் கட்சிப் பிரசாரத்திற்கு அரசாங்கத்தின் பணமும், வசதிகளும் செலவழிக்கப்படுவது எப்படி நியாயமாகும் ? ஆட்சிப் பீடத்திலிருப்பவர்கள் ஆட்சிப்பொறுப்பை வைத்துக் கொண்டே எப்படிக் கட்சிப் பிரசாரம் செய்பலாம் ? கட்சிப் பிரசாரம் செய்வதுதான் அவர்களின் நோக்கம் என்றால், கூசாமல் ஆட்சிப்பொறுப்பை விட்டுவிட்டுக் கட்சிவேலையைக் கவனிப்பதுதானே ? அல்லது ஒய்வுபெற்றுக் கொண்டு தம் சொந்த செலவில் கட்சிப்பிரசாரம் செய்து மீண்டும் வந்த பிறகு ஆட்சிப் பொறுப்பில் அமரட்டுமே ? அதற்கும் ஒருவரையரை தேவையில்லையா ? மாதத்திற்கு இருபது நாட்கள் சராசரியாக எல்லாமந்திரிகளும் வெளியூர்ச் சுற்றுப்பிரயாணத்தில் தான் ஈடுபட்டிருக்கிறார்கள் படிச் செலவைக் கணக்குப்போட்டு வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் சுற்றுப்பிரயாணகாலங்களில் ஏற்படும் செலவுகளையோ தனிப்பட்டவர்கள் பலரே ஏற்றுக்கொள்வதாக தெரியப்படுகின்றது. சுற்றுப் பிரயாணம் எதற்கு என்றால், சொந்தக்கட்சிப் பிரசாரத்திற்கே! அரசாங்க அலுவல்கள் சிலவற்றையும் பார்க்கிறார்களே என்னலாம். இந்த மந்திரிகள் வந்த அலுவல்களைப் பார்க்க வேண்டுமென்ற அவசியமேயில்லை! இவர்கள் பார்க்காமலேயே அந்த அலுவல்கள் சரிவரநடக்கக்கூடியவைதான். மந்திரிகள் தலைநகரிலிருந்து அரசாங்கப் பணியாற்றவேண்டியவர்களேயல்லாமல் ஊர்சுற்றித் திரிய வேண்டியவர்களல்லர்.

நாடாளும் மந்திரிகள் மாதத்திற்கு இருபது நாட்கள்வெளியூர்ப் பிரயாணத்தில் இருந்தால், அரசாங்கம் எப்படி உருப்பட முடியும் ? அதன் ஆளுகையின் கீழ் இருக்கும் மக்கள்தாம் எப்படி நல்வாழ்வு வாழமுடியும் ?

மந்திரியிலிருந்து காங்கிரஸின் மட்டரகம்வரையில் அரசாங்கத்தை மிரட்டி ஜனநாயகத்தைக் காற்றில்பறக்கவிட்டு, யதேச்சாதிகார, ஆணவ அடக்குமுறை, ஒரு கட்சி அரசாங்கத்தை நடத்திவருபவர்களாகத்தானிருக்கிறார்கள் இக்தப் படுகொலையிலிருந்து, ஜனநாயகம்,மீண்டும் எப்பொழுது உயிர்பெற்று எழுமோ தெரியவில்லை !

காங்கிரஸ் ஆளவந்தார்களின் செயல்கள், நாட்டில் நடப்பது ஜனநாயகமா ? சண்டித்தனமா? என்றுதான்கேட்க வைக்கின்றன !

பஞ்சாப் கிஸான்கள் ஒத்துழையாமை நிறுத்தப்பட்டது

புதுடில்லி, ஜூன் 9—

நிலத்தில் உழைப்பவர்களை அந்த நிலத்திலிருந்து வெளியேறும்படி செய்வதை ஆட்சேபித்து சென்ற 6 வாரகாலமாக நடைபெற்றுவரும் பஞ்சாப் கிசான் சத்யாக்கிரகம் இன்னும் 15 தினங்களில் வாபஸ் பெறப்படலாம் எனத்தெரிகிறது.

பெரோஸ்பூர் அம்பாலா ஜில்லாக்களில் இந்த சத்தியாக்கிரகம் வெற்றிகரமாக நடைபெற்றதாம்.

ஹோஷியூர் ஹிஸ்ஸார் ஜில்லாக்களில் ஜூன் 15 க்குப்பின் கிசான்கள் வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப் படமாட்டார்கள். ஆகவே இந்த இடங்களில் எல்லாம் சத்யாக்கிரகம் வாபஸ் பெறப்பட்டுவிடும்.

இந்த சத்யாக்ரகம் ஆரம்பித்ததிலிருந்து 556 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். 36 பேர்கள் பொதுஜன பாதுகாப்புச் சட்டப்படி விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

'ஸ்மித்' மயம்!

லண்டன், ஜூன் 9—

ஒரு நூற்றாண்டுக்கு முன் பிரிட்டனில் மிகவும் சர்வ சகஜமான பெயர் ஸ்மித் என்பது. அப்பெயர் இன்றும் அதிகமாகவேபழக்கத்தில் இருந்துவருகிறது.

இன்று 70 பேர்களில் ஒருவர் பெயர் ஸ்மித் என்று இருக்கிறதாம் அதாவது பிரிட்டனிலுள்ள ஜனத்தொகையில் 800,000 பேர் ஸ்மித்களாம்.

யு. எஸ்ஸில் 'பிரட்'

லண்டன் டெலிபோன் டைரக்டரியில் 100 பக்கங்கள் ஸ்மித்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

பிரிட்டனில் 'ஸ்மித்' எவ்வளவு சர்வ சகஜமோ அவ்வளவு சகஜமாம் யுனைடெட் ஸ்டேட்ஸில் 'பிரட்' என்ற பெயர்.

[உரையாடல்] மக்கள் மன்றம் [துப்பறிவோன்]

[உரையாடுவோர்: மணி அய்பர், ரங்காச்சாரி
இடம்: மாம்பலம் இரயில்வே ஸ்டேஷன்.
காலம்: காலை சுமார் 10 மணி]

மணி அய்பர் பத்திரிகை படித்துக்கொண்டிருக்கிறார் அப்பொழுது ரங்காச்சாரி அங்கு வருகிறார். ரங்காச்சாரியைக் கண்டதும்...

மணி: ஓ! வரணும், வரணும்! ஏது இன்னிக்கு லேட் ஆயிட்டாப் போலிருக்கே!

ரங்: ஆமாங்காணும், என்ன செய்யறது... காலேஜ் ரிஓபன் பண்ணப்போற காலமாச்சேன்னே. நம்ப பையனை காலேஜிலே சேர்க்கணும். அதுக்காக அலையவேண்டிருக்கு. மினிஸ்டர்ஸ், எம். எல். ஏ. இவா தயவை நாடிதிரிஞ்சா கூட காரியம் ஆறதா இல்லியே. என்ன பண்றதுங்காணும். இதனாலேயேரெண்டு நாளா ஆபீசுக்கு லேட்டா போயிண்டிருக்கேன்.

மணி: ஆமாம்; ஆமாம்; நீர் சொல்றது வாஸ்தவங்காணும் சிட்சுவேஷன் ரொம்ப மோசமானா இருக்கு; அந்த பழைய கம்யூனல் ஜி. ஓ. நம்மவா உயிரைனா வாங்கறது எதுக்கொடுத்தாலும் கம்யூனல் ஜீ. ஓ. வா! எஜுகேஷனில் கூடவா? என்ன அநியாயம் சார்! இதோ பாரும் (பத்திரிகையை ரங்காச்சாரியிடம் நீட்டி) சிண்டிகேட் கமன்டை!

ரங்: ஆமாங்காணும், ஆமாம்; நான் முன்னேயே பார்த்துட்டேன். சுத்த மோசமாத்தானிருக்கு.

மணி: இதற்கென்னங்காணும் செய்யறது நம்ம சத்தியமூர்த்திஅய்பர் சொன்னது பொய்யாக அல்லவா போயிடுத்து.

ரங்: என்ன?

மணி: ஜஸ்டிஸ் கட்சியை குழிதோண்டி புதைச்சுட்டேமின்னு சொன்னார். ஆனா, அவா செய்த கம்யூனல் ஜீ ஓ இன்னும் உயிரோடே இருந்துண்டு இப்படி நம்மவா உயிரை வாங்குதேங்காணும்!

ரங்: அதுக்கு என்ன செய்யறதுங்காணும்! மேலே இருக்கவா சரியானபடி இருந்தா கம்யூனல் ஜி ஓவாவது மண்ணாங்கட்டியாவது; எல்லாத்தையும் ஒழிச்சுட்டிருக்கலாமே! மந்திரிகள் அதைப் பற்றி கவலைப்படறதாகவே தெரியலியே! காங்கிரஸ் மந்திரி சபையின்னுதான் பேராயிருக்கு.

மணி: அடடே! காங்கிரஸ் மந்திரிகளா, இவாளா! நாசமாப்போச்சு! அதுதான் இல்லேங்காணும், இல்லே! சுயமாகத ஜி பாவோடே சரி காரியத்துலே அசல் சூத்திரபுத்திதானிருக்கு அவாளிடத்திலேயும்,

ரங்: அதிருக்கட்டும் அந்த யுனிவர்சிடி சிண்டிகேட் கமன்ட்டை பார்த்தீரோன்னேன்.

மணி: ஆமாம், ஆமாம்: அதைப் பார்த்துட்டுதான் வயிறெரிஞ்சு பேசறேன். அதிருக்கட்டும், இதுக்குஎன்ன செய்பறது!

ரங்: செய்யறது என்ன! நடக்கிறது நடக்கட்டுங்காணும். இந்த கம்யூனல் ஜீ. ஓ வும, சிண்டிகேட சலசலப்பும் நம்மவாளை ஒண்ணும் செய்துடமுடியாது அப்படியே இருந்தாலும், அதெல்லாம் கவர்மெனட் இன்ஸ்டிடுஷன் சம்பந்தப்பட்ட வரையிலே தானே செல்லுபடியாகப் போறது! மற்ற பிரைவேட் இன்ஸ்டிடுஷன்களிலெல்லாம் நம்மவா வச்சதுதானேங்காணும் சட்டம்! அதுமட்டுமல்ல; காலேஜ் மானேஜ்மெண்ட்டிலே இருக்கவாளுகளெல்லாம் நம்மவா தயவு தேவை; தெரியுமோன்னா!

மணி: தெரியும்! தெரியும் பிராக்டிக்கலா பார்த்தா நம்மவாளுக்குத்தான் லாபம். கம்யூனல் ஜி ஓ வெல்லாம் சட்டத்தோட சரி.

ரங்: நீர் சொல்றதும் சரிதாங்காணும். இருக்கபோதிலும் அமெரிக்காவிலே இருக்கிறவரைக்குமதொல்லைதானே நம்மவாளுக்கு.

மணி: அதிருக்கட்டும் இதைப் பற்றி நம்ப பத்திரிகைகளெல்லாம் என்ன செ[ய்]றதே!

ரங்: சொல்றதா! சரியாப்போச்சு! நீர் 'இந்து'வைப் பார்க்கவே இல்லியா!

மணி: ஏன்? என்ன விசேஷம்?

ரங்: அடா.... அடா! என்ன ஜோரா எழுதியிருக்கு தெரியுமா? சிண்டிகேட்டுக்குச் சரியான சூடுங்காணும்!

மணி: ஓகோ! அப்படியா. இன்னும் நான் பேப்பரை பார்க்கவேயில்லே, என்ன இருந்தாலும 'இந்து'வினுடைய தைரியமே, தைரியங்காணும்!

ரங்: நன்னா சொன்னயள். நமக்கு இப்படிப்பட்ட பேப்பர் சப்போர்ட் இல்லேன்னா, அவாளெல்லாம் நம்மவாளே விழுங்கி ஏப்பமிட்டுடுவாங்காணும்! ஏப்பமிட்டுடுவா!

மணி: சரி, சரி, ட்ரையின் வந்துடுத்து, வாரும் வாரும், அப்புறம் பேசிக்கலாம். (இருவரும் அவ்விடம் விட்டு புறப்பட்டு விடுகின்றனர்.)

1954 ல் அவனி அழிந்துவிடுமாம்!

நியூயார்க், ஜூன் 9—

உலகம் 1954-ம் ஆண்டு ஏப்ரல் 7ல் சமாப்தியாகிவிடும் என்று நம்பும் சுமார் 24000 அமெரிக்கர்கள் சான்பிரான்ஸிஸ்கோ ஒன்றுக்காக பாதாள அறைகளை தயாரித்து வருகின்றனர்.

மலாகுவெஸ்விலுள்ள ஸ்வாமைட் மதப்பிரிவினர்கள் உலகம் அழியும் காலம் வந்துவிட்டதென்றும், ஜலவாயு குண்டு கண்டுபிடிக்கப்பட்டிருப்பதே இதற்கு தக்க சான்று என்றும் கூறுகின்றனர். இவர்கள் 1954-ம் ஆண்டு ஏப்ரல் 7ல் ஆத்மாவை ரக்ஷிக்க தினம்பிரார்த்தனைசெய்து வருகின்றனர். —ரூனோப்

தமிழகம் திரும்பிய மலேயா சாம்பசிவம்

—————(0—————

ஆற்காட்டில் பெற்றோருடன் தங்குவார்

வடவரின் சுரண்டல் தமிழகத்தில் வலுத்த காரணத்தால் பிழைக்க வழியற்று தென் ஆப்பிரிக்கா சென்ற இந்தியக் குடும்பத்தைச் சேர்ந்தவர் தோழர் மலேயா சாம்பசிவம். நிறவெறியர்களின் கொடுங்கோன்மை இந்தியரை நிலைபெறச் செய்யாததால் தாய்நாடு திரும்பிய தோழர் சாம்பசிவத்தின் குடும்பம் மீண்டும் மலேயாவுக்குச் செல்ல நேர்ந்தது.

சென்ற நாட்டில் சிக்கல்கள் பல ஏற்பட்டுள்ள காரணத்தால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு பல தொல்லைகளுக்குள்ளாகி முடிவில் பிரிவி கௌன்சில் அப்பீலில் விடுதலையாகி நேற்று கப்பல் மூலமாகச் சென்னை வந்து சேர்ந்தார்.

28 வயதான தோழர் சாம்பசிவம் எளிய உடை தரித்திருந்தார்; நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு மிருதுவான குரலில் தமிழில் பதிலளித்தார். அவர் தன்னைப்பற்றிக் கூறியதாவது:—

எனக்கு வயது 28. விவாகமாகவில்லை. என் தகப்பனார் பெயர் நாராயணஸ்வாமி. நான் தென்னாப்பிரிக்காவில் டர்பனில் பிறந்தேன். எங்கள் குடும்பத்தினருக்குச் சொந்த ஊர் வட ஆர்க்காடு ஜில்லா [illegible] கிராமம். என் தகப்பனார் [illegible]வாக இருக்கும்போது அவர் பாட்டனார் குடும்பத்துடன் சென்று தென்னாப்பிரிக்காவில் குடியேறினர். எனக்கு நான்காவது வயது நடக்கையில் இந்தியர்களுக்கு விரோதமான சட்டங்கள் பிறப்பிக்கப்பட்ட காரணத்தால் தென்னாப்பிரிக்காவைவிட்டு வெளியேற நேர்ந்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு என் பெற்றோர்கள் என் சகோதர சகோதரிகளுடனும், மாமனுடனும், வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்து மலேயா சென்று குடியேறினர். பேராக்கில் சரியவான் என்னும் இடத்தில் ரப்பர் தோட்டத்தில் தொழிலாளராக வேலை செய்தனர். சோழா மகா கணேஷ்வர வித்தியாசாலையில் நான் ஆறுவது வகுப்பு வரை தமிழ் படித்தேன். 17-வது வயதில் படிப்பை நிறுத்தினேன். அதே பள்ளியில் ஆசிரியராக வேலைக்கமர்ந்தேன். இரண்டாவது மகாயுத்தம் ஆரம்பமாகும் வரை அந்த வேலையிலிருந்தேன். யுத்தம் தொடங்கியதும் என் தகப்பனார் தாய்நாடு திரும்பினார். என் சகோதரி சிங்கப்பூரிலிருந்தாள். 1942 ல் நான் அங்கு சென்றேன். வாழ்க்கை நடத்துவது ரொம்பக் கஷ்டமாக இருந்தது. சிங்கப்பூர் ஜப்பானியர் வசம் வந்தபின் நான் ஜப்பானிய ராணுவத் தொழிற்சாலையொன்றில் வேலை செய்தேன். ராஷ்பிஹாரி கோஷின் போக்கும் பிடிக்காததால் இந்திய தேசிய ராணுவத்தில் நான் சேரவில்லை.

ஜப்பானியர் வெளியேறிய பிறகு குளுவாங் ஜில்லாவில் சொந்தமாக ஒரு பள்ளிக்கூடம் நடத்தினேன். பணக் கஷ்டத்தால் அதை மூடி மளிகை வியாபாரத்தில் இறங்கினேன். அத்துறையிலும் தோல்வியே ஏற்பட்டது.

தோட்டங்களின் முதலாளிகளும், பள்ளி ஆசிரியர்களும், பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்களும் இந்தியத் தொழிலாளர்களின் குழந்தைகளை நடத்தியவிதம் கேவலமாக இருந்தது. அதைக்கண்டு சகியாமல் இத்திசை நிலை முன்னேற சேவை செய்யத் தொடங்கினேன். மலேயா பொதுத் தொழிலாளர் யூனியன் பலம்பொருந்தியதாயிருந்தது. அதில் தொண்டனாகி சில கிளைகளில் நிர்வாகியாகவும் பணியாற்றினேன். மலேயாவில் முதல் விசை தொழிலாளிகள் தகராறு ஏற்பட்டது. அவசரகால சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. யூனியன் சட்டவிரோதமாக்கப்பட்டது.

நான் கம்யூனிஸ்ட் அல்ல. ஆனால் அரசாங்கத்தினர் என்னை அப்படிக் கருதினர். 1948-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நான் ஒரு சொந்த காரியமாக இருந்த இடத்திலிருந்து 15 மைல் அப்பாலிருந்த ஒரு ஊருக்கு நடந்து செல்லவேண்டியிருந்தது. ஒரு வழியில் சீனர் கோஷ்டியொன்றுக்கும், மலேயர் துணைப்படையினர் கோஷ்டியொன்றுக்கும் தகராறு நடந்துகொண்டிருந்தது. சீனர்கள் பயங்கர இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டனர். நான் சமாதானமாகத் தீர்த்துவைக்க முயன்றேன். வாய்ப்பேச்சு முற்றி இரு கோஷ்டிக்கும் அடிதடி ஏற்பட்டது. துணைப்படையினர் என்னை கலகக்காரனெனக்கருதி சுற்றிக்கொண்டு தாக்கினர். பலத்த காயமேற்பட்டது. நான் கீழே விழுந்துவிட்டேன். பிரக்ஞையற்றுக்கிடந்த என்னைப் பிணமென்று கருதி துணைப்படையினர் வழியே சென்றனர். ஒன்றரை மணி நேரம் கழித்துத் திரும்பிய அவர்கள் நான் சாகாமலிருப்பது கண்டு துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல விரும்பினர். கிராம அதிகாரி பெரியவர் அவர்களைத் தடுத்தார். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். ஆறுமாதகாலம் சிகிச்சை பெற்றும் பூரணவுடல் நலம் ஏற்படவில்லை. அப்பொழுது நான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டேன்.

நான் ஆஸ்பத்திரியில் இருக்கும்போதே [illegible] போலீசார் அடிக்கடி என்னிடம் வந்து என் வசம் கைத்துப்பாக்கி இருந்ததாக ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்தம் செய்தனர். ஒப்புக்கொண்டால் தண்டனைக் குறையும் என்று ஆசை காட்டினர். நான் மறுத்தேன். கடைசியில் என் தாயாரும் என்னைக் கண்டு போலீசார் கேட்கும்படி ஒப்புக்கொள்ளுமாறு கூறினார். அதன் பேரில் வேறுவழியில்லாமல் போலீசார் கேட்டதற்கெல்லாம் நான் சரியென்றேன்.

படுத்த படுக்கையாக இருக்கையிலேயே வழக்கு நடந்தது. ஜொஹூர்பாரு கோர்ட்டுக்கு என்னைத் தினம் இரு கைதிகள் தூக்கிச் செல்வர். கைத்துப்பாக்கி வைத்திருந்ததாக மலேயா அவசரச் சட்டப்படி என்மீது வழக்கு. நான் குற்றவாளியல்ல என்று ஜூரிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர். வெள்ளைக்கார நீதிபதி அதற்கு ஒப்புக்கொள்ளாமல் மறு விசாரணைக்கு உத்தரவிட்டார். ஜொஹூர் பாரு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை நடந்தது. என் சார்பில் வாதாட ஏற்பாடு செய்வதற்காக என் உறவினருக்குக் கடிதம் எழுதி போலீஸாரிடமே கொடுத்தேன். அது போய்ச் சேரவில்லை. என் சார்பில் சர்க்காரால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் எதிர்க்கட்சிக்குச் சாதகமாகப் பேசினார். 1949 மார்ச் 27-ம் தேதி மூன்றரை மணிக்கு எனக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனைக் கைதிகள் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். ஒரு வருஷம் பத்து நாட்கள் அங்கேயே அடைபட்டுக் கிடந்தேன். மலேயா கௌன்சிலில் நான் செய்துகொண்ட அப்பீல் நிராகரிக்கப்பட்டது.

மலேயாவில் இந்திய சர்க்கார் ஏஜெண்ட் தோழர் ஜே. ஏ. திவி ஜூன் மாதம் என்னைச் சிறையில் வந்து பார்த்தார். மேல்கோர்ட்டு முடிவாகும் நிலையிலிருந்த எனக்கு அவர் உதவியளிப்பதாக உறுதி கூறினார். ஜூன் 16-ந் தேதி எனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டிருந்தது. தோழர் திவியின் முயற்சியால் ஒத்தி வைக்கப்பட்டது என்று பின்னர் எனக்குத் தெரியவந்தது. ஜூலை இரண்டாம் தேதி தோழர் திவி திரும்ப வந்தார். பிரிவி கௌன்சிலுக்கு மனுச் செய்துகொள்ள என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார். 1950 மார்ச் மாதம் இறுதியில் பிரிவி கௌன்சில் என்னை விடுதலை செய்ய உத்தரவு செய்துவிட்டதாக என் சகோதரக் கைதிகள் குதூகலத்துடன் எனக்கு அறிவித்தனர். ஏப்ரல் முதல்தேதி விடுதலை செய்யப்பட்டேன். சிறைவாயிலில் மீண்டும் கைது செய்யப்பட்டேன். 13 நாள் சிறையிலிருந்தபின் போலீஸ் தலைமைக் காரியாலயத்தில் தோழர் திவியை சந்தித்தேன். தாய்நாடு செல்ல விரும்புவதைத் தெரிவித்தேன் அதற்கு அவர் உதவினார். சிங்கப்பூருக்கும் பினாங்குக்கும் இடையிலுள்ள ஸ்வெட்டன்ஹாம் துறைமுகத்தில் மார்ச் 31 ந் தேதி கப்பலேறும் வரை போலீஸ் காவலில் இருந்தேன்.

இன்று என் தேக நிலை இருக்கும் விதத்தில் என் வருங்கால திட்டம் பற்றி எதுவும் சொல்வதற்கில்லை. சொந்த ஊர்போய் உடம்பை சவுக்கியப்படுத்திக்கொள்ளப்போகிறேன். இன்று சென்னையில் ஓய்வெடுத்துக் கொண்டு நாளை ஆர்க்காடு செல்ல உத்தேசம்.

மலேயாவில் இந்தியர் நிலை

மலேயாவில் இந்தியர் நிலைபற்றி பத்திரிகையாளர் கேட்டதற்கு தோழர் சாம்பசிவம் சொன்னதாவது:—

மலேயாவில் அஞ்சமும் பஞ்சமும் தலைவிரித்தாடுகின்றன. அரசாங்கத்தின் போக்கு காரணமாக கும்பல் கும்பலாக இந்தியர் வெளியேறி வருகின்றனர். மலேயருக்கும் சீனருக்கும் சண்டை மூட்டிவிட சர்க்கார் முயன்று வருகின்றனர். இந்தியர் இத்தகராறில் சிக்கிக்கொள்ளவில்லை.

தோழர் சாம்பசிவம் இப்பொழுது [illegible] தங்கியிருக்கிறார். துறைமுகத்திலிருந்து ரயில்வே ஸ்டேஷனுக்கு செல்லும் வழியில் தொழிலாளர் பிரதிநிதிகள் சிலர் அவரை மாலைசூட்டி வரவேற்றனர்.

யோகாப்பியாசத்துக்கு எழுந்தருளுகின்றனர்

லண்டன், ஜூன் 9—

இப்பொழுது [illegible] மிகவும் பிரபலமடைந்துவரும் யோகாப்பியாசத்தில் விண்ட்ஸர் கோமகனும் அவருடைய மனைவியும் விசேஷ சிரத்தைகாட்டி வருகின்றனர்.

இவ்விஷயம் இப்பொழுதுதான் தெரியவந்தது. ஒரு பிரெஞ்சு நாடகமேடை நடிகை விண்ட்ஸர் மனைவி தோழியர் சிம்ஸனிடம் தன் எடை அதிகமாகி வருகிறதைப் பற்றி கவலையுடன் தெரிவித்தபோது தோழியர் விண்ட்ஸர் என்னைப்போல நீங்களும் யோகாப்பியாசத்தை மேற்கொள்ளுங்கள் என்று கூறினாராம்.

விண்ட்ஸர் கோமான் சிரசாஸனம் போடுவதில் நிபுணராக இருக்கிறாராம்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

	ரூ. அ. பை.
முன்வரவு	3030—6—6
லெட்சுமி மயூரநாதன், தஞ்சை	5—0—0
எம். பி. ஆர். லிங்கம், தா. பேட்டை	1—0—0
சகுந்தலா எம். எஸ். என். ராசன், ,,	0—8—0
கே. எஸ். [illegible]ணியம், ,,	1—0—0
எம். கே. ராமலிங்கம், ,,	0—8—0
எம். நடராஜன், சத்தூர்	1—0—0
டபிள்யூ பொன்னையா, ,,	1—0—0
குப்புசாமி, செட்டிக்குப்பம்	3—0—0
ச. பாலசுந்தரம், நுங்கம்பாக்கம்	5—0—0
ச. கலைச்செல்வன், சென்னை	1—0—0
	3049—6—6

ஸ்டாக்ஹோம் சமாதானக் கமிட்டி கோரிக்கை

—————(0)—————

இந்தியக் கம்யூனிஸ்டுகள் ஆதரவு

புதுடெல்லி, ஜூன் 9—

ஸ்டாக்ஹோம் மில கம்யூனிஸ்ட் ஆதரவுபெற்ற சமாதானக் கமிட்டி விடுத்துள்ள கோரிக்கைக்கு ஆதரவு தேட இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகள் முயற்சிசெய்துவருகின்றனர். கோரிக்கையில், ஸ்டாக்ஹோம் கமிட்டி அணுசக்தி ஆயுதங்கள் தடைசெய்யப்படவேண்டும் என்றும், யுனைடெட் ஸ்டேட்ஸில் இப்பொழுதுள்ள அணுகுண்டுகள் எல்லாம் அழிக்கப்படவேண்டும் என்றும், கோரப்பட்டிருக்கிறது.

இதற்காக இந்தியாவில் ஆதரவு தேடும் பணியை 'கிராஸரோடு' செய்துவருகிறது. இக்கோரிக்கைக்கு உலகில் 20000000 பேர்களின் கையெழுத்துகள் பெறப்பட்டிருக்கின்றனவாம்.

ரயில்வேக்களை ஒன்றுசேர்த்தல்

தொழிலாளர் ஆதரவு

புதுடெல்லி, ஜூன் 9—

இந்திய ரயில்வேக்களை மாற்றியமைக்க ரயில்வே போர்டு தீர்மானித்துள்ளதை அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனம் வரவேற்கிறது என்று இந்த சம்மேளன அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த திட்டத்தினால் வருடத்திற்கு ரூ. 10 கோடி வரையில் பணம் மிச்சமாகலாம் என்று அவர் கூறினார். இந்த ஏற்பாட்டிற்கேற்ப பெடரேஷனையும் திருத்தியமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

'பீர்' குடிக்கு பதில் பால்

பெர்லின், ஜூன் 9—

ஜெர்மன் தொழிலாளர்கள் அவர்கள் வழக்கமாக அருந்தும் 'பீர்' குடியை விட்டுவிட்டனர். பால் குடிக்க ஆரம்பித்து விட்டனர். அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யும் சில பானங்களால் பீர் வழக்கமே போய்விட்டதாம்.

பட்டப்பகலில் படுகொலை

சென்னை, ஜூன் 9—

நேற்று முற்பகலில் சாணிகுளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் (25) என்பவர் சென்ட்ரல்ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள ஸ்டான்லிபாலத்துக்கருகில் குத்திக் கொலை செய்யப்பட்டார். அவருடன் இருந்தவர் கத்திக்காயத்துடன் தப்பித்துக்கொண்டார். கொலைகாரர்கள் யாரென்று தெரியவில்லை; போலீசார் புலன் விசாரித்து வருகிறார்கள்.

கொலை செய்யப்பட்ட சுப்பிரமணியம் சிறைச்சாலையில் யாரையோ சந்தித்துவிட்டுத் தன் நண்பருடன் திரும்பி வருகையில் இரண்டு பேர் அவர்களைத் தாக்கி உடன் இருந்தவரைக் கத்தியால் குத்தினார்களாம். அதன் மேல் சுப்பிரமணியம் காயமடைந்த நண்பரைவிட்டு ஓடிப் பாலத்திலிருந்து பக்கிங்காம் கால்வாய் கரைமீது குதித்து ஓட ஆரம்பித்தாராம். கொலைகாரர்கள் முதலில் காயமடைந்தவரைவிட்டுவிட்டு சுப்ரமணியத்தைப் பிடித்துக் கத்தியால் பல காயங்களை உண்டாக்கினார்களாம். இதே இடத்தில் சுப்ரமணியம் இறந்துவிட்டார்.

சிங்கப்பூரில் புத்துணர்ச்சி

சிங்கப்பூரில் குடியேறியுள்ள தமிழர்கள் பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கான வசதியை செய்துதர ஒரு புது அரசியல் ஸ்தாபனம் ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

'மலேயா நண்பன்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் தோழர் எம். ஆர். எஸ். [illegible] தான் இதற்கான ஏற்பாடுகளை செய்துவருகிறார்.

குழந்தை மணத்துக்கு அமெரிக்காவிலும் எதிர்ப்பு

நியூயார்க், ஜூன் [illegible]—

டென்னஸ்ஸியில் 13 வருஷங்களுக்கு முன் 9 வயது சிறுமிக்கும் 22 வயது வாலிபனுக்கும் திருமணம் நடந்தபோது, இதற்கு ஏகமாக எதிர்ப்பு இருந்தது. பெண் ஸ்தாபனங்கள் இத்தகைய பால்ய விவாகத்தை அனுமதிக்க கூடாதென்று வற்புறுத்தின.

கலியாணத்தின்போது பொம்மையை வைத்துவிளையாடின மணமகளுக்கு இப்பொழுது 22 வயது ஆகிறது. அவளுக்கு இப்பொழுது நான்கு குழந்தைகள் இருக்கின்றன.

இன்றைய சர்க்காரிடம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்க வேண்டிய நேரத்தை இழந்துவிட்டார். நமக்குள் பிளவேற்பட்டதால் போராட்டம் கொஞ்சம் தடைபட்டிருக்கிறது. நமக்குள் ஏற்பட்ட பிளவினுல் நாம் பெரும் போராட்டங்களை நடத்த முடியாதென்று ஆளும் கட்சியினர் எண்ணி, கல்வித் துறையிலும் மற்ற துறைகளிலும் நமக்கு கேடு விளைவிக்கும் திட்டங்களைப் புகுத்தி வருகிருர்கள். அவர்கள் நினைப்பது தவறு என்பதையும் நாம் கூடிய சீக்கிரம் பெரும் போராட்டங்களை நடத்தி வெற்றி காண முடியும் என்பதையும் இங்கு கூடியுள்ள மக்கள் கூட்டம் எடுத்துக்காட்டும். நாம் நமக்குள் ஏற்பட்ட பிளவைப் பற்றி இனியும் சிந்தித்துக்கொண்டிருப்பதில் நம் காலத்தை செலவிடாமல் நம் அறிஞர் அண்ணு அவர்களின் தலைமையின் கீழ் இடைவிடா தொண்டாற்ற வேண்டும் என்று உங்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். சென்ற அறப்போரின்போது கழகத் தோழர்களுடையவும் பொது மக்களுடையவும் உணர்ச்சி எந்த நிலைமையில் இருந்ததோ அதே நிலைமைக்கு மறுபடியும் கழகத்தை கொண்டு வருவதற்குத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது.

நம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இதுவரை சுமார் 500 கிளைகள்வரை தழைத்திருப்பதைக் காண நமக்கு பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. திராவிட மக்கள் நம் கழகத்தை பெரும் அளவில் ஆதரிக்கிருர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் மிகவும் குறுகிய காலத்தில் 500 கிளைகள்வரை தழைத்திருப்பதாகும் நம் கழகம் இவ்வளவு குறுகிய காலத்தில் முன்னணிக்கு வந்து அரசியலார் கவனத்தையும் ஈர்த்திருப்பதற்கு காரணம் நம் அண்ணு அவர்களின் இடைவிடா உழைப்பும், பணிமதிப்பும், நம்பிக்கையும்தானென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதுவரை 5 மாவட்டங்களில் மாவட்ட மாநாடு நடத்தி இருக்கிருர்கள். இன்னும் மற்றமாவட்டங்களிலும் மாநாடு நடந்து முடிந்தவுடன மாகாண மாநாடு கூட்டி திட்டங்கள் வகுத்து பெரும் போராட்டங்கள் நடத்தியாக வேண்டும். நாம் நடத்தவிருக்கும் போராட்டங்களில் நிச்சயம் வெற்றி காண்போம் என்ற திட நம்பிக்கை எனக்கிருக்கிறது. மாகாண மாநாட்டுக்கு முன நாம் செய்யவேண்டிய முதல் வேலை, குறைந்த அளவு ஒருலட்சம் அங்கத்தினர்களாவது சேர்த்தாகவேண்டும். இந்த ஒரு லட்சம் அங்கத்தினர்களையாவது சேர்த்துக்கொண்டு மாகாண மாநாட்டை விரைவில் கூட்ட நாம் பாடுபடவேண்டும். அங்கத்தினர்கள் சேர்ப்பதும் கழகக் கிளை இல்லாத சிற்றூர்களில்கூட கழகம் அமைப்பதும்தான் நமது தற்போதைய ஆக்க வேலையாகும். அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலையை இளைஞர்கள்தான் அதிக ஆர்வத்துடன் செய்ய முனவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நம்கொள்கை யினின்றும் வழுவாது அங்கத்தினர் சேர்ப்பதை முதன்மையாகக்கொண்டு நேர்மையான தொண்டாற்றிக்கொண்டு சென்ருல் நம்மை பின்பற்றுபவர் எண்ணிக்கை இன்னும் பெருகி, ஏனைய தோழர்களும் நம்முடன் வந்து சேர்வார்களென்ற உறுதி எனக்கு உண்டு. நமக்குள் ஏற்பட்ட பிளவும் அதிக நாளைக்கு நீடித்திருக்க முடியாது. ஏனெனில் கொள்கையளவில் நமக்குள் பிளவே கிடையாது. ஆகவே தோழர்களே, நாம் நமக்குள் சரியான ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டுதான் பெரும் போராட்டங்களில் ஈடுபட வேண்டியிருப்பதால் எல்ல இடங்களிலும் கழகங்கள் ஏற்படுத்தும்படி மறுமுறையும் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மக்களின் கல்வியமைப்பில் சர்க்கார் செய்திருக்கும் மாறுதல்களால் ஏற்படப்போகும் தொல்லைகளை எதிர்நோக்கி மிக்க நெருக்கடியான நிலைமையில் நாம் இங்கு கூடி இருக்கிருேம் முன்பு தோழர் ஆச்சாரியார் அவர்களாலும், தோழர் அவினுசிலிங்கம் செட்டியார் அவர்களாலும் இந்தி இஷ்ட பாடமாகப் புகுத்தப்பட்டபோதே நாம் அதை எதிர்த்து ஆயிரக்கணக்கான தோழர்கள் சிறை சென்ருேம் என்பதும் இரு உயிர்களை பலிகொடுத்தோம் என்பதும் நம் தோழர்கள் அனைவருக்கும் நன்குதெரியும். இப்போது மலையாள மந்திரி மாதவமேனன் அவர்கள் இந்தியை கட்டாயபாடமாக்கியதுடனில்லாது, நம் தாய்மொழியாகிய தமிழ் கட்டாய பாடமாக கற்க வேண்டியதில்லை என்று உத்திரவிட்டிருக்கிருர். இது தமிழ் நாட்டுக்கு தமிழ் தெரியாத தமிழரல்லாதார ஒருவர் கல்வி மந்திரியாக இருப்பதால் நேர்ந்த கேடாகும். நாம் இதை கண்டிப்பாய் எதிர்த்து முறியடித்தேயாகவேண்டும் இம் மாநாடு இதற்கான வழிவகைகளை வகுத்துக்கொடுக்குமென்று எதிர்பார்க்கிறேன்.

சமுதாயத்துறையில் நாம் தற்கால அரசியலாரிடமிருந்து எவ்விதமான சீர்திருத்தத்தையும எதிர்பார்க்க முடியாத நிலையில்தானிருக்கிருேம். இந்திய நாட்டின் முதலமைச்சரும் கடவுள் நம்பிக்கை இல்லை என்று சொல்லிக்கொள்பவருமான பண்டித ஜவஹர்லால நேருவே புராண நம்பிக்கையுடையவராக இருக்கிருர். அவருடைய தந்தை இறந்தபொழுது இறுதிக்கடன் ஆற்றும்போது கங்கைக் கரையில் புராண முறைப்படி சடங்குகள் நடத்தியதைப் பத்திரிகைகளில் வெளிவந்த படங்களின் வாயிலாக பார்த்தோம்' பிறகு சுதந்திரம் பெற்ற அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டபோதும் கப்பல்கள் மிதக்கவிடும்போதும் இன்னும் எந்தக் காரியம் செய்தாலும் நல்லநாள் பார்த்து ஜோதிடர்கள் குறித்துக்கொடுத்த நேரத்தில் தான் நடத்திவைக்கிருர். இப்படிப்பட்ட புராண நம்பிக்கை உள்ளவர்களிடமிருந்து நாம் எந்தவிதமான சமுதாய சீர்திருத்தத்தையாவது எதிர்பார்க்க முடியுமா? ஆகவே நாம்தான் சமுதாயத் துறையில் பெரும்புரட்சி ஏற்படுத்தி வருகிருேம். இன்னும் தொடர்ந்து சமுதாய சீர்திருத்தத் தொண்டையே முதன்மையாகவும் கொண்டு தொண்டாற்றி வருவோம். நம் கழகத்தைத் தவிர சமுதாய சீர்திருத்த ஆர்வமுள்ள வேறு கழகமே நம் நாட்டில் இல்லையென்று கூட சொல்லலாம்.

இன்றைய மாநாட்டுக்கு தலைமை வகிக்கவிருக்கும் இளஞ்சிங்கம் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் எதிர்காலத்தில் திராவிட நாட்டை தனி நாடாக்க தகுதிவாய்ந்த, தன்னலமற்ற, பெருங்குணம் படைத்த, போர்வீரர்; உடல் பொருள், ஆவி, மூன்றையும் திராவிட நாடு காண இழக்க நேரினும் பின்வாங்காத நெஞ்சுரம் கொண்ட நேர்மையாளர் என்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்டுதான் இம் மாநாட்டிற்கு தலைமை தாங்கும் பேற்றை வரவேற்புக் குழுவினர் அளித்திருக்கின்றனா என்று நான் எண்ணுகிறேன்.

எனக்குப் பின் பேசவேண்டிய பேரறிஞர்கள் பலர் இருப்பதால் இத்துடன் என் உரையை முடித்துக்கொண்டு இம்மாநாட்டை துவக்கி வைக்கிறேன்.

மீண்டும்ஒருமுறை எல்லோருக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

— —

'டைபிஸ்ட்' புத்தி!

நியூயார்க், ஜூன் 8—

வாஷிங்டனில், பிரிட்டிஷ் ராணுவகாரியாலயத்தில் டைபிஸ்ட்டாக வேலை செய்யும் ஒருயுவதிக்கு, ஐரிஷ்ஸ்வீப் ஸ்டேக்கில் 25000 பவுன் பரிசு கிடைத்தது. இவ்வளவு பணக்காரியாகியும், இவர் டைபிஸ்ட் வேலையைவிடப் போகதில்லையாம். தன் பணத்தில் பாதியை, இவர் தன் தாயாருக்குக் கொடுத்துவிட்டார்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

13-6-50

தேனி :—சி. என். அண்ணுத்துரை.

14-6-50

கோட்டை (கோவை) :—சி. பி. சிற்றரசு.

15-6-50

மேட்டுப்பாளையம் (நீலகிரி) :—சி. பி. சிற்றரசு.

தோழர் ந. அ. நடராசன் திருமணம்

21—6—50 காலை 9-மணிக்கு

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டிக் கடுத்த கள்ளிக்குடியில் நடைபெறும்

தோழர்கள் சி. என். அண்ணுத்துரை. என் வி. நடராசன், ஏ. சித்தையன், பேராஹூரனி வி. எஸ். குழந்தை ஆகியோர் கலந்துகொள்வர்

இங்ஙனம் : ந. அ. பழனிவேல்,
உரிமையாளர்: கருணாநிதி ரைஸ்மில், முத்துப்பேட்டை.

இனி நடப்பவை

சைதாப்பேட்டை:— இவ்வூர் தி. மு. க. கழக அங்கத்தினர் கூட்டம் 11-6—50 மாலை 6-மணிக்கு சடையப்ப முதலி தெருவில் நெம்பர் 2 மேல்மாடியில் நடைபெறும்.

• • •

கோவை, கோட்டை:—இவ்வூர் தி. மு. கழக துவக்க விழா 14-6-50-ல் நகர மண்டப திடலில் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு தலைமைவகிப்பார். அ. ச. நடராசன், புலவர் சுந்தரராசன், ராசமாணிக்கம் ஆகியோர் பேசுவார்கள்.

* * *

பொள்ளாச்சி:—11—6—50 ஞாயிறு இரவு 8 மணி அளவில் இவ்வூர் தி. மு. வாலிபர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும். பொதுக்கூட்டம், நாடகக் குழு அமைத்தல் பற்றி ஆலோசிக்கப்படும்.

• • •

தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் மாநாடு:—11—6—50 ஞாயிறு காலை 9-மணிக்கு சென்னை மவுண்ட்ரோட் ராஜாஜி ஹாலில் ஆரம்பமாகும். தோழர் பி. என். ராஜ்போஜ் தலைமை வகிப்பார். தோழர் என். சிவராஜ, பி. ஏ. பி. எல். மாநாட்டைத் திறந்துவைப்பார். தோழியர் சௌந்திரி அம்மையார் கொடியேற்றுவிப்பார். இத்துடன் தலைவர்களின் படத் திறப்பு விழாவும் நடைபெறும்.

* * *

தேனி:—(13—6—50) செவ்வாய்க்கிழமை இரவு 8-மணிக்கு நேதாஜி மைதானத்தில், தி. மு. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணுத்துரை அவர்கள்சொற்பொழிவு நிகழ்த்துவார். மற்றும் கழகம் பிரமுகர்களும் கலந்துகொள்வார்கள். ஒலிபெருக்கி உண்டு.

கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டு அறிக்கை

கோவை முத்தமிழ்வளர்ச்சி மாநாட்டில் கலந்துகொண்ட மாநாட்டுக் குழுவினர்களும், ஆதரவாளர்களும் மாநாட்டுக்காகச் செலவு செய்த கணக்குகளையும், டிக்கட் விற்ற பாக்கித் தொகைகளையும், டிக்கட்டுகளையும் 15-6-50 வியாழக்கிழமை மாலை 9 மணிக்குள் மாநாட்டு விளம்பரச் செயலாளர் தோழர் சி. வி. கோபாலிடம் (அலுவலகம் 8/20 ஸ்டார் பில்டிங், ஜெயில்ரோடு, கோவை) கண்டிப்பாய்க் கொண்டுவந்துகொடுக்குமாறு மாநாட்டுப் பொருளாளர் தோழர் பி. பழனிச்சாமி அவர்கள் கேட்டுக்கொள்கிருர்கள்.

வணக்கம்!

பம்பாயில் எடுக்கப்பட்ட "சத்யாவதாரம்" என்ற தமிழ் படத்தில் நடிக்கச் சென்ற நான 30—5—50ல் திருச்சி வந்து சேர்ந்தேன்.

அன்பர்களுக்கு வணக்கம்

M. M. மாரியப்பா

நடிகர், திருச்சி.

ஆண் உடையில் பெண்

நியூயார்க், ஜூன் 9—

வர்ஜீனியாவில் ஒரு குழந்தைக்குத் தகப்பனுரான பின்பும் காதலியை மணக்க மறுப்பதாக ஒரு 'வாலிபன்'மீது வழக்கு தொடரப்பட்டது. உண்மையில் இவ் 'வாலிபன்' பெண் என்பதும் 27 வருடகாலமாக இவள் ஆண்களின் உடையே உடுத்திவந்ததும் பின்னர் வெளியாயிற்று.

காதலி இவ் 'வாலிபன்'தான் தன் குழந்தையின் தகப்பன் என்று கோர்ட்டில் கூறினர். அவள் தாயாரும் இவ் 'வாலிபன்' தன் பெண்ணை மணந்துகொள்வதாக உறுதி கூறியிருந்தார் என்று கூறினர்.

ஆனல் அவ் 'வாலிபன்' தான் பெண்தான் என்றும், இரண்டு வயது குழந்தைக்கு தான் தகப்பனாக இருப்பதென்பது சாத்தியமற்றகாரியம் என்றும் கூறினர். இவ் 'வாலிபனை' டாக்டர் பரிட்சை செய்து 'பெண்தான் அவன்'என்று சர்டிபிகேட் கொடுத்தார். கோர்ட்டார் வழக்கை தள்ளிவிட்டனர்.

இவ் 'வாலிபன்' ஜெனர் பாலின் என்பதாம். சிறு வயது முதற்கொண்டே இவளின் பெற்றோர்கள் இவளை ஒரு ஆண் மகனைப் போலவே வளர்த்துவந்தனராம்.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் "மாலைமணி"விற்பனைசெய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்பு வாய்ந்த ஏஜெண்டுகள் தேவை.

திருச்சி, குடியாத்தம், தஞ்சை,

மானேஜர்:—'மாலைமணி'

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.